
# காவிரிப்பிரச்சினை: முத்தமிழறிஞர் கலைஞர்- கழகத்தலைவர் மு.க. ஸ்டாலின் எடுத்துக் கொண்ட முயற்சிகளும் - சட்டப் போராட்டங்களும்! வெற்றி வரலாறும்!





இந்தியாவில் எந்த நதியை விட காவிரி மட்டும்தான் பாசன வருவாயில் தொன்மையும், முதன்மையும் பெற்றிருந்த தாக டியூக்ஆப் வெலிங்டன் கூறுகிறார். குடகு மலையில் உற்பத்தியாகின்ற காவிரி கர்நாடகத் தில் காவிரி 320 கி.மீ பயணித்து பின் தமிழ கத்தில் 416 கி.மீ பயணிக்கின்ற ஒரு நெடிய நதி.

கரிகால் சோழனின் காலம் என்று சொல்லப் படும் 2000 2000 ஆண்டுகளுக்கு முன்பி ருந்தே காவிரியின் வரலாறு தொடங்கிவிட்டது. காவிரியின் குறுக்கே கட்டப்பட்ட அணைதான் கல்லணை ஆகும். வயதின் அடிப்படையில் ஆகும். வயதின் அடிப்படையில் மெசப்படோ மியா என்று அறியப்பட்ட ஜோர்டான் நாட்டில் உள்ள ஜாவாஅணை கி.மு.3000 ஆண்டுக ளுக்கு முன்பாக கட்டப்பட்டது என்றாலும் இப் போது அந்த அணைக்கான அடையாளம் இல்லை.

எகிப்து நாட்டின் கெயிரோவில் உள்ள காத் தல்கபாரா அணை கி.மு.2000 ஆண்டுக ளுக்கு முற்பட்டது. இந்த அணையும் அழிந்து விட்டது.

கி.மு. 1700 க்கு முற்பட்ட ஏமன் நாட்டில் உள்ள கிரேட்டாம்ஆப்மேரிப் இதுவும் அழிந்து விட்டது. பழைமையான அணைகள் எல்லாம் அழிந்துவிட்ட நிலையில் காவிரியில் கட்டப் பட்ட கல்லணை மட்டும் தான் தமிழகத்தில் உழவுத் தொழில் இன்று நடந்து கொண்டிருப் பதை உணர்த்துகின்றது.

காவிரியில் வெள்ளப்பெருக்கு எடுத்தபோ தெல்லாம் வடிகாலாக கீழ்படுகையில் தமிழ கம் இருந்துள்ளது. உதாரணமாக கி.பி. 1118 விக்கரமச்சோழன் ஆட்சியின்போது திருச்சி அருகே உறையூர்பகுதி காவிரி வெள்ளத்தால் பேரழிவை சந்தித்தது.

காவிரியின் தொன்மையைப் பார்த்தால் அதன் பாசனப்பகுதியின் வரலாற்றுக்கு முந்தையது என தொல்பொருள் ஆராய்ச்சி யாளர் ராவ் குறிப்பிடுகிறார். 4000 ஆண்டுக ளுக்கு முன்பே காவிரியின் டெல்டா பகுதியில் மனித வாழ்வும் வேளாண்மையும் இருந்த தென என்பதற்கு அடையாளமாக "நடந்தாய் வாழி காவிரி" என்ற வரிகள் சிலப்பதிகாரத்தில் காணப்படுகின்றது.

காவிரியின் நீரை மைசூர் பகுதி (கர்நாடகா) 19ஆம் நூற்றாண்டின் இறுதிவரை குடிநீருக்கு மட்டுமே பயன்படுத்தி வந்தது. 1982 இல் மைசூரில் பெரும் பஞ்சம் ஏற்பட்டது ஆகவே ஆகவே மைசூர் நிர்வாகம் ஸ்தம்பித்தது. மக் களின் கோபத்தையும் ஆர்பாட்டத்தையும் கட்டுப்படுத்த முடியாத நெருக்கடியில் அரசு தவித்தது.

இச்சூழ்நிலையில்தான் காவிரி தண்ணீரை பயன்படுத்தி வேளாண்மையை மைசூர் சமஸ் தானம் அறிமுகப்படுத்தியது. காவிரிநீரை கர் நாடகா 120 ஆண்டுகள் மட்டுமே பாசனத்திற்கு பயன்படுத்துகிறது.

ஆனால் தமிழ்நாடோ 2000 ஆண்டுக ளுக்கு முன்பாகவே காவிரி நீரை பயன்படுத் துகிறது. முதன் முதலில் மைசூர் திவான் பூர் ணய்யா காவிரியை பயன்படுத்தி பாசன வசதிக்கான திட்டத்தை வகுத்தார். இதற்கு சென்னை ராஜாதானி கடிதம் மூலம் எதிர்ப்பு தெரிவித்தது. இதனால் சென்னை ராஜதானிக் கும் மைசூர் சமஸ்தானத்திற்கும் காவிரி பிரச் சினை மூண்டது. இதன் அடிப்படையில் சென்னை ராஜாதானி தரப்பில் ஸ்டோக், வால்ஸ் என்ற ஆங்கிலேய பிரதிநிதிகளும் மைசூர் சமஸ்தானம் சார்பில் ஆலிவர்ஜென் ஜான், போவான், சேசாஸ்திரி ஐயர் ஆகியோர் பிரதிநிதிகளாக இருந்து காவிரி தொடர்பான அப்பேச்சுவார்த்தையில் மைசூருக்கு தான பாசன வசதி உண்டு என்றும் இதில் தலையி டும் உரிமை சென்னை மாகானத்திற்கு இல்லை என்றும் வாதத்தை தொடங்கி வைத் தார். இதற்கு சென்னை ராஜாதானி பிரதிநிதிகளுக்கு கிருஸ்து சகாப்தத்திற்கு முன் னதாகவே பண்டைய சோழமன்னர்கள் காவி ரியின் நீரை இப்பகுதிகளில் உள்ள விவசாயிகள் (காவிரி டெல்டா) உரிமை பெற்று அனுபவித்து வந்துள்ளனர். இதன் அடிப்படை யில்தான் 18.02.1892 இல் மைசூர் சமஸ்தா னத்திற்கும் சென்னை இராஜதானிக்கும் முதல் ஒப்பந்தம் ஆனது.

இதில் முக்கிய ஒப்பந்தம் என்பது சென்னை இராஜதானியின் அனுமதியின்றி மைசூர் சமஸ்தானம் காவிரியில் குறுக்கே நீர்த்தேக்கங்களை கட்டக்கூடாது என்பதாகும்.

பின்பு இந்த ஒப்பந்தத்திலும், மைசூர் சமஸ் தானம் முரண்பட்டதினால் மீண்டும் 18.02.1924இல் ஒரு ஒப்பந்தம் போடப்பட்டது. மைசூரில் கே.ஆர்.எஸ் அணை, மேட்டூர் அணை கட்டுவதற்குண்டான ஒப்பந்தம். மைசூர் கே.ஆர்.எஸ் அணை 1929 ல் கட்டி முடிக்கப்பட்டது. மேட்டூர் அணை 1934 ல் முடிந்தது. 1892-1924 ஆகிய இரண்டு ஒப்பந் தங்களுமே காவிரி கடைமடை பகுதிக்கு தண் ணீர் பாய்வதை உத்திரவாதப்படுத்துகின்றன.

1956ல் மொழிவழி மாநிலங்கள் பிரிந்த போது கர்நாடகம் 1959இல் ஒப்பந்த மீறலை தொடங்கிவிட்டது. இதன் அடிப்படையில்தான் 1956ல் மாநிலங்களுக்கிடையே ஆன நதிநீர் தாவா சட்டம் இந்திய நாடாளுமன்றத்தில் நிறை வேற்றப்பட்டது. 1956இல் மாநில சீரமைப்புக்குப்பின்பு கர்நாடகா அரசு காவிரி பாசனப்பரப்பை நீட்டிப்பதில் ஆர்வம் காட்ட தொடங்கிவிட்டது.

1091 ம் ஆண்டு தமிழ்நாடு 13.45 இலட்சம் ஏக்கர், 1901 ம் ஆண்டு கர்நாடகா 1.11 இலட்சம் ஏக்கர், 1928ம் ஆண்டு தமிழ்நாடு 14.44 இலட் சம் எக்கர் 1928 ம் ஆண்டு கர்நாடகா 1.11 இலட் சம் ஏக்கர் 1956 ம் ஆண்டு தமிழ்நாடு 22.77 இலட்சம் ஏக்கர் 1956 ம் ஆண்டு கர்நாடகா 4.92 இலட்சம் ஏக்கர் 2018 ம் ஆண்டு கர்நாடகா 23.85 இலட்சம் ஏக்கர் மாநிலங்க ளுக்கிடையேயான நதிநீர் பிரச்சினை ஏற்பட் டால் ஒன்றிய அரசின் பேச்சுவார்த்தை மூல மாக தீர்வு தீர்வு காண்பது அல்லது நடுவர் மன்றத்தை அமைத்து பிரச்சினையை தீர்த்து வைப்பது. ஆனால் இந்த இரண்டு காரியங்க ளையும் 1956 லிருந்து இன்றைய தினம் வரைக்கும் காவிரி நீர் பிரச்சினையில் ஒன்றிய அரசு நியாயத்தின் பக்கம்நின்று, தமிழகத்திற்கு நல்லதொரு தீர்வினை ஏற்படுத்தாததினால் தலைவர் கலைஞர் அவர்கள், 1969 இல் தமி ழகத்தில் முதலமைச்சராக வந்தபிறகு காவிரி நதிநீர் தொடர்பாக நல்லதொரு தீர்வினை கண் டிட பல தீர்வினை கண்டிட பல நடவடிக்கை களை மேற்கொண்டார்.

தலைவர் கலைஞர் நடுவர்மன்றம் அமைப் பதற்கு எடுத்துக் கொண்ட முயற்சிகளை விளக் குவது இச்சூழ்நிலையில் விளக்குவது பொருத் தமாக இருக்கும் எனக் கருதுகின்றேன்.

17.02.1970 இல் கலைஞர் அவர்கள் நடு வர்மன்றம் அமைக்கப்படவேண்டும் என்று முதன் முதலாக ஒன்றியஅரசுக்கு கடிதம் எழு தினார். 08.07.1971இல் நடுவர்மன்றம் அமைக்க வேண்டும் என சட்டமன்றத்தில் தி.மு.க. ஆட்சியில்தான் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. 27.07.1989இல் தி.மு.க. ஆட்சியில் இருந்தபோதுதான் கலைஞர் அவர் கள் அனைத்துக்கட்சி தலைவர்கள் கூட்டம் கூட்டப்பட்டு, அதில் நடுவர் மன்றம் அமைக்கு மாறு ஒன்றிய அரசை கேட்டுக்கொள்ளும் தீர் மானம் நிறைவேற்றப்பட்டது. 02.12.1989இல் வி.பி.சிங் பிரதமராக இருந்தபோது நடுவர்மன் றம் அமைக்கக்கோரி கடிதம் எழுதினார். அத னடிப்படையில் வி.பி.சிங் அவர்கள் பேரவை யில் நடுவர் மன்றம் குறித்து தீர்மானம் நிறைவேற்றி அனுப்புமாறு தலைவர் கலை ஞர் அவர்களை கேட்டுக் கொண்டதால் 24.04.1990 அன்று பேரவையில் நடுவர் மன்றம் அமைத்திட தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, ஒன்றிய அரசுக்கு அனுப் பிவைக்கப்பட்டது.

தலைவர் கலைஞர் அவர்கள் தொடர்ந்து எடுத்துக் கொண்ட முயற்சிகளின் பலனாக தலைவர் கலைஞர் முதலமைச்சராக இருந்த போது 02.06.1990 இல் நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது.

28.07.1990 இல் கழக ஆட்சியில்தான் நடு வர் மன்றத்தில் இடைக்கால தீர்ப்பினை கோரி மனு செய்யப்பட்டது. 05.01.1990 அன்று இடைக்கால தீர்ப்பு வழங்கிட நடுவர் மன்றம் தங்களுக்கு அதிகாரம் இல்லை எனக்கூறியது. இதனால் தலைவர் கலைஞர் அவர்கள் 10.01.1992 ஆம் ஆண்டு நடுவர் மன்றத்திற்கு அதிகாரம் இருக்கின்றதா? இல்லையா? என்று இல்லையா? என்று உச்சநீதிமன்றத்தில் வழக்கு வழக்கு தொடர்ந்ததால், 26.04.1991 இல் நடுவர் மன்றத்திற்கு அதிகாரம் உள்ளது என்றும் நடுவர் மன்றம் இடைக்கால தீர்ப்பு வழங்கலாம் என்றும் மிகவும் தெளிவாக கூறியது.


இந்நிலையில் தி.மு.க.ஆட்சி கலைக்கப் பட்டு, அம்மையார் ஜெயலலிதா ஆட்சிக்கு வந் தார். 1991-1996 வரைக்கு நடுவர் மன்றம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை 1996இல் தி.மு.க. ஆட்சிக்கு வந்தபிறகுதான் தலைவர் கலைஞர் அவர்கள் 09.07.1997, 23.07.1997, 29.07.1997, 01.11.1997, 06.11.1997 ஆகிய நாட்களில் பிரதமருக்கு கடி தங்களிலும் பிரதமரை இரண்டுமுறை நேரில் சந்தித்தும், நடுவர் மன்ற இடைக்கால தீர்ப் பினை உடனடியாக அறிவிக்குமாறு கேட்டுக் கொண்ட நிலையில் 07.08.1998 இல் இடைக் கால ஒப்பந்தம் ஏற்பட்டு, அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் 205 TMC தண்ணீர் விடுவிக் கப்பட வேண்டும் என்று பிரதமர் தலைமை யில் காவிரி பாயும் நான்கு முதல்வர்கள் அடங் கிய ஆணையம் அமைக்கப்படும் என்று முடிவெடுக்கப்பட்டது. இதுகுறித்து அனைத்து கட்சித்தலைவர்களும் பாராட்டினார்கள்.

இந்துஸ்தான் டைம்ஸ்ஆப் இந்தியா பத்திரிக்கையில் தலைவர் கலைஞர் Scores Diplomatic Victory என்று பாராட்டி எழுதியது. 11.08.1998 அன்று காவிரி நிதிநீா ஆணையம் அமைக்கப்பட்டு அறிவிப்பு வெளியிடப்பட்டது.

தலைவர் கலைஞர் அவர்கள் எடுத்துக் கொண்ட நீண்டநெடிய முயற்சிக்குப்பின் தான் 05.02.2007 அன்று காவிரி நடுவர் மன்ற தீர்ப்பு வெளியானது. நடுவர்மன்றம் காவிரிமன்ற இறுதித்தீர்ப்பில் பாரா 32இல் சம் பந்தப்பட்ட மாநிலங்களுக்கு உரிய தண்ணீர் திறந்துவிடப்படுவதை உறுதி செய்ய வேண் டும். நதியின் கடைமடைப்பகுதி விவசாயிகளின் நலன்களை பாதிக்கும் எந்த செயலையும் நதியின் மேல்பகுதியல் உள்ள மாநிலம் செய்யக்கூடாது

காவிரி நதி நீர் கர்நாடகத்திற்கு சொந்தமா னது இல்லை இது ஒரு பன் மாநில நதி எனவே, இதன் வழியில் இது ஓடிக்கொண்டே இருக்க வேண்டும். இதை தடுத்து குறுக்கே அணை கள் கட்டி கீழ் உள்ள பாரம்பரிய உரிமை உடைய மாநிலங்களுக்கு பாதகம் விளைவிக் கக்கூடாது என 5 பேர் அடங்கிய அரசியல் சட் டஅமர்வு குறிப்பிட்டு கர்நாடகாவை எச்சரித் துள்ளது.

மாநிலங்களுக்கிடையே ஆன நதிநீர் தாவாக் 2002ல் ஒரு தாவாக் கூட்டம் 1956இல் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டது. நடுவர் மன்ற தீர்ப்பு உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு இணை யானது.



**கம்பம் நா. ராமகிருஷ்ணன்**
கம்பம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்
தேனி தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர்

மேலும் நடுவர்மன்ற தீர்ப்புப்படி மத்திய அரசு காவிரி மேலாண்மை வாரியம் அமைக் கலாம் என்று தெளிவாக 2002இல் திருத்த சட்டத்தில் சொல்லப்பட்டது. உதாரணமாக நர் மதா நதிநீர் நடுவர் தீர்ப்பு ஆணைய தீர்ப்பு அர சிதழில் 1979 டிசம்பரில் வெளியிடப்பட்டது. 1980 டிசம்பரில் ஆணையம் அமைக்க ப்பட்டது.

1924இல் 575.68 TMC தண்ணீர் தமிழ கத்திற்கு கிடைத்தது. படிப்படியாக இது குறைந்து நடுவர் மன்ற இடைக்கால உத்திர வில் 205 TMC யாக குறைந்து இறுதி உத்திர வில் 192 TMC யாக குறைக்கப்பட்டது. மொத் தம் குறைக்கப்பட்டது. மொத்தம் 740 TMC அளவில் தமிழகம் 419 TMC (கர்நாடகம் கொடுப்பது 192 TMC மட்டும்)

மீதம் பாலாறு செய்யாறு தொட்டாறு பவானி யாறு நொய்யலாறு அமராவதியாறு இவற்றிலி ருந்து காவிரியில் கலக்கும் தண்ணீ 227 TMC கர்நாடகா, 30 TMC கேரளா 7 TMC பாண்டிச் சேரி மீதமுள்ள 14 TMC சுற்றுச்சூழல் பாதுகாப்பு கடலில் கலக்கும் உபரி நீராகும்.

நடுவர் மன்ற தீர்ப்பில் 18.85 இலட்சம் ஏக் கர் சாகுபடி பரப்பிற்கு மேல் கர்நாடகா அரசு அதிகரிக்கக்கூடாது என தீர்ப்பு வழங்கினாலும், தீர்ப்பு வழங்கினாலும், இப்போது 23.85 இலட் சம் ஏக்கர் சாகுபடி செய்வது மட்டுமல்லாமல் மேகதாது குறுக்கே 5912 கோடி ரூபாயில் அணை கட்டப்படும் என்றும், இத்திட்டத்தின் மூலம் 88 TMC தண்ணீர் தேக்கவும், 400 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிற திட்டம் என முதல்வர் சித்தராமையா தெரிவித் ததோடு அல்லாமல் 1185 கோடி செலவில் 500 ஏரிகளுக்கு மேலாக தண்ணீர் தேக்கும் திட்ட மும், 15 தடுப்பனண கட்டுவதற்கான திட்டத்தை செயல்படுத்தி வருகிறார்.

நடுவர் மன்ற தீர்ப்பு வெளியாகி 11 ஆண்டு கள் முடிவுற்று இன்றைய நாள் வரையிலும் முழுமையான தீர்ப்பு எட்டப்படாத நிலையில் தான் 16.02.2018 ஆம் நாள் உச்சநீதிமன்றம் ஒரு தீர்ப்பை தந்தது.

ஏற்கனவே நடுவர் மன்றம் வழங்கியிருந்து 192 TMC தண்ணீரிலிருந்து 14.74 TMC தண் ணீர் குறைத்து தற்போது 177.25 TMC என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பில் கூறியுள்ளது.

காவிரி பாயும் மாவட்டங்களில் 20 TMC நிலத்தடி நீர் இருப்பதாக குறைத்திருக்கின்றது. இது நமக்கு நமக்கு பாதமான முடிவு. டெல்டா மாவட்டங்களில் ஒவ்வொரு பகுதியிலும் நிலத் தடி நீர் வேறுபட்டு இருக்கின்றது. உண்மை யில் டெல்டா பகுதியில் உள்ள நிலத்தடி நீர் விவ சாயத்திற்கு உகந்ததாக இல்லை. திருவாரூர் நாகை தஞ்சை ஆகிய மாவட்டங்களில் கடல் நீர் உட்புகுந்து நிலத்தடி நீரை உப்பு நீராக்கிவிட்டது. தண்ணீரில் ஆர்க்னிக் பிளோ ரைடும், தோரியம் என்றும் தண்ணீரை நஞ் சாக்கி இருக்கின்றது. இப்படி இருக்க உச்சநீதி மன்றம் நிலத்தடி நீர் பற்றி குறிப்பிட்ட தீர்ப்பு பாதகமான அம்சமாக இருப்பதாக தமிழகம் கருதுகின்றது. மேலும் ஆறு வாரத்திற்குள்ளாக காவிரி மேலாண்மை வாரியம் ஒழுங்காற்றுக் குழு அமைக்கப் படவேண்டும் என்றும் 1892 மற்றும் 1924 இல் ஒரு ஒப்பந்தம் திருத்தப்பட மாட்டாது. இந்தத் தீர்ப்பு 15 ஆண்டுகளுக்கு அமுலில் இருக்கும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

உச்சநீதிமன்ற தீர்ப்பு அடிப்படையில் ஆறு வாரத்திற்குள் ஒன்றிய அரசு காவிரி மேலாண்மை வாரியம் அமைப்பதில் திட்ட மிட்டு காலதாமதிக்கிறது என்பதனை நம் கழ கத்தலைவர் அவர்கள் உணர்ந்து உடனடி யாக சர்வ கட்சித்தலைவர்கள் மற்றும் விவசாய பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் கூட் டம் ஏற்பாடு செய்யவேண்டும் என்று தமிழக முதல்வர் இ.பி.எஸ்க்கு நெருக்கடி தந்ததன் விளையாக கூட்டம் கூட்டப்பட்டது.

கூட்டத்தில் அனைத்துக்கட்சி தலைவர்கள் மற்றும் விவசாய பிரதிநிதிகள் பிரதமர் மோடி யைச் சந்தித்து காவிரி மேலாண்மை வாரியம் அமைத்திட அழுத்தம் கொடுக்கின்ற வகையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆனால், அனைத்துக்கட்சி அனைத்துக் கட்சி தலைவர்கள் மற்றும் விவசாய பிரதிநிதிகளை இதுகுறித்து பேசுவதற்கு பிரத மர் மோடி நேரம் ஒதுக்காதது கடும் கண்டனத் திற்குரியது. இதுமட்டுமல்லாமல், இது இது தமிழக மக்களையே அவமானப்படுத்தும் செயலாகும். இதற்கான முயற்சியில் தனது கண்டனத்தை கழகத் தலைவர் பதிவு செய்தி ருப்பது எதிர்கட்சிதலைவர் என்ற முறையில் தன் கடமையை திறம்பட ஆற்றியிருக்கின்றார்.

இந்த சூழ்நிலையில் தமிழக முதலமைச்சர் நம் கழகத் தலைவரை அழைத்ததன் பேரில் கழகத்தலைவரும், துரைமுருகனும் முதல மைச்சரை சந்தித்தார்கள். அப்போது முதல்வர் முதலில் நீர்வளத்துறை அமைச்சர் நிதின்கட் கரியை சந்திக்குமாறு ஒன்றிய அரசு தெரிவித் ததாக நம் தலைவரிடம் சொன்னவுடன் அதை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன் என்று தனது கண்டனத்தை தெரிவித்தார்.

அதற்குப்பின் காவிரி மேலாண்மை வாரி யம் அமைக்க வலியுறுத்தி சிறப்பு சட்டமன்றத் தைக் கூட்டி தீர்மானம் நிறைவேற்ற உடனடி யாகநடவடிக்கைஎடுங்கள்என்றுமுதல்வரிடம் தெரிவித்தார்.

ஆனால், உடனடியாக முதல்வர் சிறப்பு சட் டமன்றத்தை கூட்டாமல் காலம் தாழ்த்தியது வேதனைக்குரியது. 11.03.2018 ஆம் நாள் காலை நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்கின்ற நேரத்தில் ஒன்றிய அரசு உச்ச நீதிமன்ற உத் திரவை செயல்படுத்துவதில் காலம் தாமதமும் தயக்கமும் குழப்பமும் ஏற்படுத்துவது என்றும் மிகவும் கண்டனத்திற்குரியது என்றும் இது குறித்து விவாதித்து தீர்மானம் நிறைவேற்றிட சிறப்பு சட்டப்பேரவை

கூட்டம் வேண்டுமென வலியுறுத்தி தலைவர் ஸ்டாலின் வெளிநடப்பு செய்தார்.

தொடர்ச்சி நாளை...

### ரீல்ஸ் மோகத்தில் உள்ள த.வெ.க. ஆட்சியின் நிர்வாக திறமையின்மையால்

# தொழில் முதலீடு வெகுவாக குறைந்து 17வது இடத்திற்கு தள்ளப்பட்ட தமிழ்நாடு!

## "தினகரன்" நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

*சென்னை, ஆக. 12 -* ரீல்ஸ் மோகத்தில் உள்ள த.வெ.க. ஆட்சியில் மக்கள் பணிகள் எதுவும் நடக்க வில்லை. ஆட்சியின் நிர் வாக திறமையின்மையால் தொழில் முதலீடு வெகு வாக குறைந்து 17 வது இடத்திற்கு தமிழ்நாடு தள் ளப்பட்டுள்ளதாக "தினக ரன்" நாளேடு தலையங்கத் தில் விமர்ச்சித்துள்ளது.

இது குறித்து 11.08.2026 தேதிய "தினகரன்" நாளேடு தலையங்கத்தில் கூறியிருப் பதாவது:


தினகரன்
ஆகஸ்ட் 11, 2026 செவ்வாய்க்கிழமை
பின்னோக்கி தமிழகம்
தமிழ்நாட்டில் மாற்றம் வேண்டும் எனக்கூறி பொதுக்கூட்டங்களில் சினிமா வசனம் பேசி ஆட்சிக்கு வந்தார் முதல்வர் விஜய். ஆட்சிக்கு வந்து 100வது நாளை நெருங்கி விட்டது. மக்களுக் கான திட்டங்கள் எதுவும் அறிவிக்கவில்லை. 200 யூனிட் வரை இலவச மின்சாரம் அறிவிக்கப்பட்டது. ஆனால் அதன் பயனை நுகர்வோர் அனுபவிக்க முடியவில்லை. மாறாக மின் கட்டணம் அதிகமாக இருப்பதாக மக்கள் புலம்பி வருகின்றனர்.
காவிரி விவகாரம், மேகதாது பிரச்னை, தொகுதி மறுவரையறை ஆகியவற்றை விவா திக்க அனைத்து கட்சி கூட்டம் நடத்த வேண்டும் என தவெகவின் கூட்டணி கட்சிகள் உள்பட அனைத்து கட்சிகளும் கோரிக்கை வைத்தன.

தமிழ்நாட்டில் மாற்றம் வேண்டும் எனக்கூறி பொதுக்கூட்டங்களில் சினிமா வசனம் பேசி ஆட் சிக்கு வந்தார் முதல்வர் விஜய். ஆட்சிக்கு வந்து 100வது நாளை நெருங்கி விட்டது. மக்களுக்கான திட்டங்கள் எதுவும் அறி விக்கவில்லை. 200 யூனிட் வரை இலவச மின்சாரம் அறிவிக்கப்பட்டது. ஆனால் அதன் பயனை நுகர்வோர் அனுபவிக்க முடியவில்லை. மாறாக மின் கட்டணம் அதிகமாக இருப்பதாக மக்கள் புலம்பி வருகின்றனர்.

காவிரி விவகாரம், மேக தாது பிரச்சினை, தொகுதி மறுவரையறை ஆகிய வற்றை விவாதிக்க அனைத்து கட்சி கூட்டம் நடத்த வேண்டும் என த.வெ.க.வின் கூட்டணி கட்சிகள் உள்பட அனைத்து கட்சிகளும் கோரிக்கை வைத்தன. ஆனால் த.வெ.க. அரசு அதனை கண்டுகொள்ள வில்லை. காவிரி பிரச்சினை தொடர்பாக விவசாயிகள், பொதுமக்களிடம் விஜய் ஆலோசனை நடத்துகிறார் என அமைச்சர்கள் பேட்டி அளிக்கின்றனர். அதற்கான படங்கள் வெளியிடுவ தில்லை. முழுக்க முழுக்க பொய்களையே கூறி வரு கின்றனர். அதற்கு மாறாக தி.மு.க.வின் திட்டங்க ளுக்கு ஸ்டிக்கர் ஒட்டும் வேலையும், தி.மு.க.வினர் மீது வழக்கு பதியவும், கைது செய்யும் படலமும் தான் நடக்கிறது. மக்களுக் கான பணிகள் இந்த ஆட்சி யில் நடக்கவில்லை.

தொழில் ஈர்ப்பு மூலத னம் தொடர்பாக தேசிய அளவில் நடத்திய ஆய்வில் தமிழ்நாடு 6வது இடத்தில் இருந்து 17வது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. கர்நா டகா, கேரளா, மேற்குவங் கம், தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் நடந்துள்ளது. மே மாதம் ஆட்சிக்கு வந்த 4 பேரின் செயல் திறனில் முதல்வர் விஜய் 4ஆம் இடத்தில் உள்ளார். 5வது இடத்தில் புதுவை உள் ளது. கர்நாடக முதல்வராக இருந்த சித்தராமையா விடம் இருந்து டி.கே.சிவக் குமார் ஆட்சி பொறுப்பை ஏற்றார். மே, ஜூன், ஜூலை மாதத்தில் இவரது திட்டங்களின் எண் ணிக்கை 319ல் இருந்து 400க்கு உயர்ந்து இருக்கி றது. ரூ.23 ஆயிரம் கோடி யாக இருந்த முதலீடு ரூ.83 ஆயிரம் கோடியாக உயர்ந் துள்ளது. ஒரு அலுமினியம் தொழிற்சாலை மற்றும் ஏர்போர்ட்டை கொண்டு வந்துள்ளார். ஆனால் தமிழ்நாட்டில் பரந்தூர் ஏர்போர்ட் திட்டம் கைவி டப்படுவதாக தெரிகிறது.

கேரளாவில் காங்கிரஸ் கட்சி ஆட்சியை பிடித் துள் ளது. ரூ.3 ஆயிரம் கோடி யில் இருந்து ரூ.12 ஆயிரம் கோடியாக முதலீடு உயர்ந் துள்ளது. மேற்கு வங்கத் தில் தனியார் துறை முத லீடு 100 சதவீதமாக அதிகரித்துள்ளது. ஆனால் தமிழ்நாட்டில் திட்டங்க ளின் எண்ணிக்கை 183ல் இருந்து 121 ஆக குறை ந் துள்ளது. மொத்த முதலீ டாக ரூ.44 ஆயிரம் கோடி யில் இருந்து ரூ.11 ஆயிரம் கோடியாககுறைந்துள்ளது. தனியார் துறை முதலீடு 75 சதவீதம் குறைந்துள்ளது. 4 மாநிலத்தில் தமிழ்நாட் டின் முதலீடு தடாலடியாக குறைந்து இருப்பது அதிர்ச் சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த 4 மாநிலத்தில் கடைசி இடத்துக்கு தமிழ் நாடு வந்துள்ளது.

இதற்கு காரணம் முதல் வர் விஜய் மீது தொழில் நிறுவனங்களுக்கு நம் பிக்கை வரவில்லை. இந்த ஆட்சிக்கு நிர்வாக திறமை இல்லை என்பதையே காட்டுகிறது. அமைச்சர் கள், தங்களது துறைகளை வளர்ச்சி பாதைக்கு கொண்டு செல்லாமல் ரீல்ஸ் மோகத்திலேயே இருந்து வருகின்றனர். இதனை விஜய் அரசு கவ னத்தில் கொள்ளவில்லை யென்றால் தமிழகம் பின் னோக்கி தள்ளப்பட்டு விடும் என்பதில் மாற்று கருத்துக்கு இடமில்லை.

இவ்வாறு தலையங்கத் தில் கூறப்பட்டுள்ளது.